RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 231 | ஆகஸ்டு.23 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5



## சினிமாவில் சம்பாதித்துவிட்டு ஓய்வுபெறும் வயதில் சிலர் கட்சி தொடங்குகின்றனர்: இபிஎஸ் விமர்சனம்

காஞ்சிபுரம், ஆக.23-

'சினிமாவில் நடித்து, பணம் சம்பாதித்துவிட்டு ஓய்வுபெறும் வயதில் கட்சி சிலர் தொடங்குவதோடு, எடுத்த உடன் எல்லாம் கிடைக்கும் என்றும் நம்புகி ன்றனர். ஆனால் உழைப்பின் மூலம் மட்டுமே உயர முடியும்' என்று அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தெரிவித்தார்.

'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற தலைப்பில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறார். இந்நிலையில், அவர் காஞ்சிபுரம் ஏனாத்தூர் பகுதியில் தனியார் விடுதியில் பல்வேறு தரப்பினரை சந்தித்து உரையாடினார். அப்போது காஞ்சிபுரம் அனைத்து நெசவாளர் கூட்டுறவு சங்க கூட்டமைப்பினர் அவரை சந்தித்தனர்.

அவர்கள் பட்டு இழை, சரிகை விலை குறைப்பு, நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு, கோயில் நிலத்தில் குடியிருப்போருக்கு பட்டா, கூட்டுறவு சங்கங்களுக்கு வருடத்துக்கு ரூ.50 கோடி மானியம் ஆகியவற்றை வழங்க வேண்டும் என்று மனு அளித்தனர். இதேபோல் வணிகர்கள், விவசாயிகள், வழக்கறிஞர்கள் உள்ளிட்டோர் சந்தித்தனர்.

விளைபொருட் களுக்கு கூடுதல் விலை, இடுபொருட்களை இலவசமாக வழங்குவது, ஏரி, குளங்களை தூர் வாருவது உள்ளிட்ட கோரிக்கைகளை விவசாயிகள் வலியுறுத்தினர். வரி ஏற்றம் தொடர்பாக வணிகர்களும் குறைகளை தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து குமரக்கோட்டம் பகுதியில் பழனிசாமி பேசியதாவது: இப்போதெல்லாமல் சினிமாவில் நடித்துவிட்டு ஓய்வுபெறும் வயதில் கட்சி ஆரம்பிக்கின்றனர். உடனே எல்லாம் கிடைக்கும் என்று நம்புகின்றனர். நான் 50 ஆண்டுகால அரசியல் மூலம் படிப்படியாக உயர்ந்துதான் இந்த நிலைக்கு வந்துள்ளேன். அதிமுகவில் மட்டுமே உழைப்பும் விசுவாசமும் இருந்தால் உயர முடியும்.

புதிய கட்சி தொடங்குபவர்கள் கூட அதிமுக தலைவர்களைத் தான் உதாரணமாக கூறுகி ன்றனர். அந்த அளவுக்கு மக்கள் நலத்திட் டங்களை செயல்படுத்தியவர்கள் நமது தலைவர்கள். தமிழகத்தில் 17 அரசு மருத்துவக் கல்லூரிகளை தொடங்கியது அதிமுகதான். அதேபோல் 67 கலை மற்றும் அறிவியல் கல்லூரி களை தொடங்கினோம். விவசாயத்துக்கும், நெசவாளர்களுக்கும் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கினோம். குடிமரா மத்து திட்டம் மூலம் நீர் நிலைகள் பாதுகாக்கப்பட்டன.

அதிமுக ஆட்சிக்கு வந்தால், வழங்கப்பட்ட நலத்திட்டங்கள் தொடரும். மாணவர்களுக்கு நிறுத்த ப்பட்ட மடிக்கணினி வழங்கப் படும். அதிமுக ஆட்சியில் மக்கள் மன நிறைவு பெறும் வகையில் பல லட்சம் மதிப்பில் கான்கிரீட் வீடுகள் கட்டித் தர நடவடிக்கை எடுக்கப் படும். திருமண உதவித் திட்டம், தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும்.

மணமகளுக்கு பட்டுப் புடவையும், மணமகனுக்கு பட்டு வேட்டியும் வழங்கும் திட்டம் செயல் படுத்தப்படும் என்றார். இந்தக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் வைகைச் செல்வன், மாவட்டச் செயலர் வி.சோமசுந் தரம், அமைப்புச் செயலர் வாலாஜாபாத் பா.கணேசன் உள்பட பலர் பங்கேற்றனர்.



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை செயலகத்தில் இருந்து காணொலிக் காட்சி வாயிலாக மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கொட்டாம்பட்டி பேருந்து நிலையத்தை திறந்து வைத்தார்கள் அதனை தொடர்ந்து புதிய பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்துகளை மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட ஊரக வளாச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வானதி அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை செயலகத்தில் இருந்து காணொலிக் காட்சி வாயிலாக மதுரை மாவட்டம், திருமோகூர் அருள்மிகு காளமேகப் பெருமாள் திருக்கோயில் புனரமைக்கும் பணிகளை தொடங்கி வைத்தார்கள் அதனை தொடர்ந்து மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இனி சிறையிலிருந்து யாரும் ஆட்சி செய்ய முடியாது: பதவி பறிப்பு மசோதா பற்றி பிரதமர் பேச்சு

பாட்னா: ஆக.23-

அமைச்சர்கள், மாநில முதல்வர்கள் மற்றும் பிரதமரின் பதவி பறிப்பு மசோதா மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அது பற்றி விளக்கம் கொடுத்துள்ளார் பிரதமர் நரேந்திர மோடி. அது குறித்து அவர் இன்று பிஹாரில் பேசுகையில், 'ஊழலை ஒழிக்க தேசிய ஜனநாயகக் கூட்டணியின் முன்னெடுப்பு இது. இனி சிறையிலிருந்து யாரும் ஆட்சி செய்ய முடியாது.' என்று கூறினார்.



பிஹாரில் இந்த ஆண்டு இறுதியில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. இதனையொட்டி, பிரதமர் மோடி 2வது முறையாக அங்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். திறந்தவெளி வாகனத்தில் ரோடு ஷோ சென்ற பிரதமர் மோடிக்கு தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். பிரதமருடன் முதல்வர் நிதிஷ் குமார், துணை முதல்வர் சாம்ராட் சவுத்ரியும் இருந்தனர்.

தொடர்ந்து கயாஜியில் நடந்த நிகழ்ச்சியில் ரூ.13,000 கோடி மதிப்பிலான நலத்திட்டங்களுக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்

இதனையடுத்து பிரதமர் பேசியதாவது: ஓர் அரசு அதிகாரி சிறையில் அடைக்கப்பட்டால். அடுத்த 50 மணி நேரத்தில் அவரது வேலை பறிபோகிறது. ஆனால் ஒரு முதல்வர், அமைச்சர், ஏன் பிரதமர் கூட சிறையில் இருந்து அரசாங்கத்தை நடத்தலாம். சில நாட்களுக்கு முன்னர் நாம் சிறையிலிருந்து அரசு உத்தரவுகள் பறந்ததைப் பார்த்தோம். தலைவர்களுக்கு இதுபோன்ற மனப்பாண்மை இருந்தால், நாம் ஊழலை எப்படி ஒழிப்பது. அதனால் தான் நாம் ஊழலுக்கு எதிரான இந்த புதிய சட்டத்தை கொண்டு வர முயற்சிக்கிறோம். அந்த வரம்புக்குள் பிரதமரும் வருகிறார்.

ஊழல் வழக்கில் சிறைக்குச் செல்லும் அரசியல்வாதிகள்தான் தங்களது பதவிகளை இழக்க வேண்டும். எனவே இந்த மசோதாவுக்கு ஊழல் அரசியல்வாதிகளே எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் இந்த மசோதாவை காங்கிரஸ், ராஷ்டிரிய ஜனதா தளம் , இடதுசாரிகள் எதிர்க்கின்றன. இவ்வாறு பிரதமர் கூறினார்.

ஊழல் அல்லது கடுமையான குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகி தொடர்ந்து 30 நாட்கள் சிறைக்காவலில் வைக்கப்பட்டால் ஓர் அமைச்சரோ, ஒரு மாநில முதல்வரோ, ஏன் நாட்டின் பிரதமரோ பதவி பறிப்புக்கு உள்ளாக வழிவகை செய்யும் சட்ட மசோதா மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முதல்நாள் இந்தக் கூட்டத்தொடர் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மசோதாவுக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ள நிலையில், அது பற்றி விளக்கம் கொடுத்துள்ளார் பிரதமர் நரேந்திர மோடி.

மக்கள் வெறும் வாக்கு வங்கி அல்ல பதவி பறிப்பு மசோதாவைத் தாண்டி பேசிய பிரதமர், "பிஹார் எனும் புனித பூமியில் எடுக்கப்பட்ட எந்தத் தீர்மானமும் வீண் போகாது. பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் நடந்தபோது பயங்கரவாதிகளை இந்த மண்ணில் இருந்து தூள் தூளாக்குவேன் என்று சபதம் செய்தேன். அந்த வாக்குறுதி நிறைவேற்றுப்பட்டது

ஆனால், பிஹார் மக்களை ராஷ்டிரிய ஜனதா தளம் தங்கள் வாக்கு வங்கியாக மட்டுமே பார்க்கிறது. அவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்காக எதுவும் செய்யவில்லை. அவர்களின் ஆட்சி காலத்தில் கயா போன்ற நகரங்கள் இருளில் மூழ்கி இருந்தன. கல்வி, வேலைவாய்ப்பு இல்லாமல் பல தலைமுறைகள் இடம்பெயர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது." என்று எதிர்க்கட்சிகளை கடுமையாக விமர்சித்தார்.

## அரசுத் துறைகளில் தற்காலிக பணியாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும்: அன்புமணி

சென்னை, ஆக.23-

உச்ச நீதிமன்ற தீர்ப்பை மதித்து தமிழக அரசுத் துறைகளில் தற்காலிக அடிப்படையில் பணியாற்றும் அனைவரையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'அரசுத் துறைகளில் தற்காலிக அடிப்படையில் பணி நியமனங்களைச் செய்வதும், அவ்வாறு நியமனம் செய்யப்பட்டவர்களை பணிநிலைப்பு செய்வதற்கும் மறுப்பதும் அப்பட்டமான உழைப்புச் சுரண்டல் என்று கூறி உச்ச நீதிமன்றம் கண்டனம் தெரிவித்திருக்கிறது. தமிழ்நாட்டில் 15 ஆண்டுகளுக்கும் மேலாக பகுதி நேரமாகவும், தற்காலிகமாகவும் பணியாற்றி வரும் ஆசிரியர்களையும், பிற பணியாளர்களையும் பணி நிலைப்பு செய்வதற்கு மறுத்து வரும் திமுக அரசு, உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்புக்கு பிறகாவது திருந்துவதற்கு முயல வேண்டும்.



உத்தரப் பிரதேச உயர்கல்வி சேவைகள் ஆணையத்தில் 1989 முதல் 1992 வரை தினக்கூலி ஊழியர்களாக பணியில் சேர்ந்த மூன்றாம் நிலை மற்றும் நான்காம் நிலை பணியாளர்கள் 6 பேர் பத்தாண்டுகளுக்கு மேலாக பணியாற்றியும் அவர்களுக்கு பணி நிலைப்பு வழங்க அம்மாநில அரசு மறுத்து விட்டது.

அவர்களில் சிலர் 30 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றியும் கூட அவர்களுக்கு பணி நிலைப்பு வழங்கப்படவில்லை. அதை எதிர்த்து தொடரப்பட்டிருந்த வழக்குகளின் மேல்முறையீட்டு மனுக்கள் மீதான தீர்ப்பில் உச்ச நீதிமன்றம் தெரிவித்திருக்கும் கண்டனமும், அறிவுரைகளும் தொழிலாளர்களின் உரிமைகளை நிலைநிறுத்தக் கூடியவை.

பணியாளர்களின் உழைப்பை மத்திய, மாநில அரசுகள் சுரண்டக் கூடாது என்று கூறியுள்ள உச்சநீதிமன்ற நீதிபதிகள், ''வேலை வழங்கும் விஷயத்தில் அரசுகள் வெறும் சந்தைப் பங்கேற்பாளர்கள் அல்ல; மாறாக, அவை அரசியல் சட்டப்படியான வேலை வழங்கும் அமைப்புகள். அரசு அலுவலகங்களில் அடிப்படையான பணிகளை தொடர்ந்து செய்யும் அவர்களின் முதுகில் அரசின் நிதிப்பற்றாக்குறை என்ற சுமையை சுமத்தக்கூடாது. தற்காலிக பணியாளர்கள் என்ற அடிப்படையில் பணிக்கு சேர்த்து விட்டு, அவர்களிடமிருந்து நிரந்தரமான ஊழியர்களுக்கான வேலைகளை காலம் காலமாக பிழிந்தெடுப்பது பொது நிர்வாகத்தின் மீதான நம்பிக்கையை சிதைப்பதுடன், அனைவருக்கும் சமமான பாதுகாப்பு என்ற அரசியலமைப்புச் சட்ட உத்தரவாதத்தையும் பாதிக்கிறது'' என்றும் அறிவுறுத்தினர்.

அந்த பணியாளர்கள் அனைவரையும் 2002ஆம் ஆண்டு முதல் பணி நிலைப்பு செய்து, அதன் அடிப்படையில் அவர்களுக்கு வழங்க வேண்டிய உரிமைகளை வழங்கவும் நீதிபதிகள் ஆணையிட்டனர்.

அரசு வேலை வாய்ப்புகளை வழங்குவதில் இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகள் 14, 16, 21 ஆகியவற்றின் அடிப்படையில் அனைவருக்கும் சம உரிமை, வேலை வாய்ப்புகளில் சமவாய்ப்பு, வாழும் உரிமை மற்றும் தனிநபர் சுதந்திரம் ஆகியவை வழங்கப்பட வேண்டும் என்பது தான் இந்தத் தீர்ப்பின் நோக்கமாகும். ஆனால், இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் தமிழக அரசு படுதோல்வி அடைந்திருக்கிறது என்பது தான் உண்மை.

தற்காலிக அடிப்படையில் பணி நியமனம் செய்யக்கூடாது என்று உச்சநீதிமன்றம் கூறியிருக்கும் நிலையில், தற்காலிக நியமனங்களை மட்டுமே வாடிக்கையாக வைத்திருக்கிறது தமிழகத்தை ஆளும் திராவிட மாடல் அரசு. திமுக ஆட்சிக்கு வந்த பிறகு எத்தனை பணி நியமனங்கள் செய்யப்பட்டுள்ளனவோ, அவற்றில் பாதி, அதாவது கிட்டத்தட்ட 50% தற்காலிக நியமனங்கள் ஆகும். அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் தொடங்கி, பல்கலைக்கழகங்கள் வரை அனைத்து நிலைகளிலும் தனியார் நிறுவனங்கள் வாயிலாக குத்தகை முறையில் பணியாளர்களை நியமிப்பதை புதிய வாடிக்கையாகவும், கலாச்சாரமாகவும் திராவிட மாடல் அரசு மாற்றியுள்ளது.

தமிழகத்தில் உள்ள அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் 7500க்கும் கூடுதலான கவுரவ விரிவுரையாளர்கள் 15 ஆண்டுகளுக்கும் மேலாக பணி செய்து வருகின்றனர்; அரசு பள்ளிகளில் சுமார் 14,000 சிறப்பாசிரியர்கள் 13 ஆண்டுகளுக்கும் மேலாக பகுதி நேரமாக பணி செய்து வருகின்றனர்.

மேலும் பல்லாயிரக்கணக்கான பணியாளர்கள் பல்வேறு அரசுத் துறைகளில் தற்காலிக அடிப்படையில் பணி செய்து வருகின்றனர். திமுக ஆட்சிக்கு வந்தால், 10 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றி வரும் ஆசிரியர்களும், பணியாளர்களும் பணி நிலைப்பு செய்யப்படுவார்கள் என்று 2021ஆம் ஆண்டு தேர்தலின் போது திமுக வாக்குறுதி அளித்து இருந்தது. ஆனால், ஆட்சிக்கு வந்தவுடன் வாக்குறுதிகளை குப்பையில் வீசி விட்டு, தற்காலிக ஊழியர்களை சுரண்டும் பணியில் திமுக அரசு ஈடுபட்டிருக்கிறது. திமுகவின் இந்த துரோகத்திற்கு மன்னிப்பே கிடையாது.

தற்காலிக ஆசிரியர் களும், பிற பணியாளர்களும் தங்களுக்கு பணிநிலைப்பு வேண்டும் என்று போராடிய போதெல்லாம் அவர்கள் மீது அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விடுவதையும், அனைவரையும் கைது செய்து சிறையில் அடைப்பதையும் தான் திமுக அரசு வாடிக்கையாக வைத்திருக்கிறது. அரசுத் துறைகளுக்கு பணியாளர்களை நியமிக்கும் விஷயத்தில் அரசுகள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை படித்தாவது திமுக அரசு தெரிந்து கொள்ள வேண்டும்; பின்பற்ற வேண்டும்.

அரசுத்துறைகளில் பகுதி நேரப்பணிகள், ஒப்பந்தப்பணிகள், தற்காலிக அடிப்படையிலான பணிகள் போன்றவை அதில் ஈடுபடுவோரை சுரண்டுவதுடன், அவர்களின் கண்ணியத்தையும் குலைக்கின்றன. எனவே, தமிழக அரசுத் துறைகளில் தற்காலிக அடிப்படையில் பணியாற்றும் அனைவரையும் பணி நிலைப்பு செய்வதுடன், அவர்கள் பணியில் சேர்ந்த நாளில் இருந்து அவர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய உயர்வு, பதவி உயர்வு உள்ளிட்ட அனைத்து உரிமைகளையும் வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்



## தாம்பரம் மாநகராட்சி பம்மல் 7வது மற்றும் 8வது வார்டு சார்பில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது

பம்மல், ஆக.23-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பம்மல் 1வது மண்டலம் 7வது மற்றும் 8வது வார்டுகளுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் பம்மல். அண்ணா நகர். தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில். பல்லாவரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், மண்டல குழுத் தலைவர் வே.கருணாநிதி, உதவி ஆணையாளர் சொர்ணலதா, மாமன்ற உறுப்பினர்கள் ரம்யா சத்யபிரபு, இன்பசேகர் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி நிகழச்சியை துவக்கி வைத்து கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்ட சத்து பெட்டகத்தை வழங்கினார். இதனை தொடர்ந்து முகாமை பார்வையிட்டு பிறப்பு, இறப்பு, ஆதார். சொத்துவரி, மின்சார அட்டை உள்ளிட்டவைகளின் பெயர் மாற்ற சான்றி தழ்களை வழங்கினார். இதில் அரசு அரசு அதிகாரிகள் உட்பட ஏராளமானோர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.





## தென்காசி மாவட்டம் கடையநல்லூரில்வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு நகர திமுக மற்றும் இளைஞர் அணி சார்பில் நடைபெறுகிறது

தென்காசி, ஆக.23-

தென்காசி தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் ஜெயபாலன் அறிவுறுத்தலின் பேரில் கடையநல்லூர் சட்டமன்ற தொகுதியில் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது கடையநல்லூர் வடக்கு மற்றும் தெற்கு நகரத்தில் உள்ள 33 வார்டுகளிலும் நகர திமுக பொறுப்பாளர் இத்தாலியன் பீரப்பா நகரக் கழக செயலாளர் அப்பாஸ் ஆகியோர் தலைமையில் வழக்கறிஞர் புடை சூழ வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணி நடைபெறுகிறது மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் தங்கராஜ்பாண்டியன், நகர இளைஞரணி அமைப்பாளர் K.R.யாசின், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ச.பிரகதீஸ், அ.முகம்மது பைசல், பெ.பிராகஷ், மா.சுகுமார், ம.மதன், ஆ.மாரிமுத்து(எ) சிவா ஆகியோருடன் கலந்து கொண்டு (BLA2) நிர்வாகிகளோடு இணைந்து நகரத்தில் உள்ள 33 வார்டு பகுதிகளிலும் அந்தந்த பூத் முகவர்கள் மற்றும் வார்டு கழகச் செயலாளர் பிரதிநிதிகள் உட்பட அனைவரது ஆலோசனை மற்றும் கவனத்திற்கு கொண்டு இந்த பணியை செய்து வருகின்றனர் இது குறித்து கடையநல்லூர் நகரம் தெற்கு பொறுப்பாளர் பீரப்பா கூறியதாவது எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் கடையநல்லூர் சட்டமன்ற தொகுதியை திமுகவிற்கு விளங்க வேண்டும் எனவும் 19 96 ஆம் ஆண்டிற்கு பிறகு திமுக வேட்பாளர் Charging தொகுதியில் போட்டியிடாத போது 30 ஆண்டுகளுக்குப் பின்பு கடையநல்லூர் சட்டமன்ற தொகுதியில் திமுக போட்டியிட வேண்டு மென தலைமைக் கழகத்திற்கு தொண்டர்களின் குரலை உறுதியாக எடுத்துச் செல்வதோடு ஏற்கனவே 2019 மற்றும் 2024 ஆண்டுகளில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் திமுக வேட்பாளர்கள் வெற்றி பெற்று அதிலும் குறிப்பாக கடையநல்லூரில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வென்றதை நினைவுபடுத்தி இந்த முறை திமுகவிற்கு தொகுதியை வழங்க வேண்டும் என தலைமையை கேட்டுக் கொள்வோம் என தெரிவித்தார் மேலும் மத்திய அரசு ஏழை எளிய குறிப்பாக தலித் மக்களின் வாக்குகளை திருடி ஆட்சியில் அமைத்து அமர்ந்தது தற் போது அம்பலத்திற்கு வந்துள்ளது இனி அது போன்று நடக்காதீர்கள் மக்கள் விழிப்போடு செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணியை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.



## தாம்பரம் மாநகராட்சி பெருங்களத்தூர் 4வது மண்டலம் 56வது வார்டு பகுதி மக்களுக்கான உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது

பெருங்களத்தூர், ஆக.23-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பெருங்களத்தூர் 4வது மண்டலம் 56வது வார்டு பகுதி மக்களுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், பகுதி செயலாளர் எஸ்.சேகர், மாமன்ற உறுப்பினர் புகழேந்தி கலந்து கொண்டு கர்பிணி பெண்களுக்கு ஊட்ட சத்து பெட்டகம் வழங்கியும் முகாமை ஆய்வு செய்து பிறப்பு, இறப்பு சான்றிதழ், மின்சார பெயர் மாற்றம், சொத்துவரி பெயர்மாற்ற சான்றிதழகளை வழங்கினார். இதில் திமுக நிர்வாகிகள் அணியின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அரசு அதிகாரிகள் உட்பட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



## உலக மூத்த குடிமக்கள் தினத்தை முன்னிட்டு தாகூர் மருத்துவக் கல்லூரியில் முதியோருக்கான மருத்துவச் சிகிச்சை முகாம்

தாம்பரம், ஆக.23-

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட ரத்தினமங்கலத்தில் உலக மூத்த குடிமக்கள் தினத்தை முன்னிட்டு தாகூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை யில் முதியோர் சுகாதார விழிப்புணர்வு மருத்துவ முகாம் நடைபெற்றது. முகாமில் பொது மருத்துவம், எலும்பு மற்றும் மூட்டு பராமரிப்பு, கண், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், மற்றும் சர்க்கரை நோய் மேலாண்மை குறித்து துறை சார்ந்த மருத்துவர்கள் விரிவாக விவரித்தனர். வயதான நோயாளிகளுக்கு மருத்துவச் சிகிச்சை அளித்து மருந்து மாத்திரைகள் இலவசமாக வழங்கினர். கல்லூரி முதல்வர் ஜெ.முத்துக்குமரன் பேசுகையில் மத்திய அரசு பொருளாதாரத்தில் பின் தங்கிய 60 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கு சக்கர நாற்காலி, ஊன்றுகோல், காது கேட்கும் கருவி உள்ளிட்ட உதவி பெறுவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி வழிகாட்ட மருத்துவமனையில் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மருத்துவமனைக்கு வருகை தரும் மூத்த குடிமக்களுக்கு உதவ அரசு அறிவித்துள்ள உதவி எண் 14567 குறித்து முதியோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியை உதவி செவிலியர்கள் மேற்கொண்டுள்ளனர் என்றார் அவர் இதில் கல்லூரி முதல்வர் டாக்டர் ஜெ.முத்துக்குமரன், மருத்துவமனைக் கண்காணிப்பாளர் டாக்டர் ஹபீப் முகமது ஆகியோர் முதியோர்களுக்கு காது கேட்கும் கருவி, ஊன்றுகோல் ஆகிய உபகரணங்கள் வழங்கினர். நிகழ்வில் 300க்கும் மேற்பட்ட முதியோர்கள் மற்றும் மருத்துவர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்





## ஆனந்தா கல்லூரி, தேவகோட்டை போதைப் பொருள் விழிப்புணர்வு கருத்தரங்கம்

தேவகோட்டை, ஆக.23-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ஆனந்தா கல்லூரியில் போதைப் பொருள் விழிப்புணர்வு கருத்தரங்கம் கல்லூரியின் செயலர் அருட்தந்தை முனைவர் செபாஸ்டியன், முதல்வர் அருட்தந்தை ஜார்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோர்கள் தலைமையில் நடை பெற்றது. இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக தேவகோட்டை துணை நீதிபதி கலைநிலா அவர்கள் பேசுகையில், போதைப் பொருளின் தீமைகள் அதனால் வரக்கூடிய விளைவுகளை மாணாக்கர்களுக்கு எடுத்துரைத்தார். மேலும் எதிர்கால வாழ்விற்கு கல்வியின் முக்கியத்துவத்துவம் மற்றும் கல்வியால் வாழ்க்கையில் உயர்ந்தவர்கள் பற்றிகூறினார். கருத்தரங்கிற்கு தேவகோட்டை வழக்குரைஞர் ஹரி பிரசாத், ஞான சுபா தர்ஷினி, மணிமேகலை, காளிமுத்து, ஆனந்தன் ஆகியோர்களும் கலந்து கொண்டு போதைப் பொருளால் இன்றைய இளைஞர்கள் படக்கூடிய துன்பங்களையும் விளைவுகளையும் அப்போதை பொருளி லிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்வதற்கான வழிமுறைகளையும் எடுத்துரை த்தார். இந்நிகழ்விற்கான ஏற்பாட்டினை நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் குமார், நான்சி, ராஜா ஷாஜகான் ஆகியோர்கள் செய்திருந்தனர்.

## ஊரப்பாக்கத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாமில் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கிய திமுக எம்எல்ஏ வரலட்சுமி மதுசூதனன்





கூடுவாஞ்சேரி, ஆக.23-

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்கொளத்தூர் ஒன்றியம் ஊரப்பாக்கம் ஊராட்சிக்கு உட்பட்ட தனியார் திருமண மண்டபத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாம் நடைபெற்றது. இதில் ஊராட்சி மன்ற தலைவர் பவானி கார்த்திக் தலைமை தாங்கினார். வட்டாட்சியர் பூங்கொடி, வட்டார வளர்ச்சி அலுவலர் மீனாட்சி, ஒன்றிய செயலாளர் எம் டி லோகநாதன், ஒன்றிய குழு பெருந்தலைவர் உதயா கருணாகரன், ஒன்றிய குழு துணை தலைவர் ஏ வி எம் இளங்கோவன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ரேகா கார்த்திக், ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி செயலர் கருணாகரன் அனைவரையும் வரவேற்றனர். நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு தொகுதி எம்எல்ஏ வரலட்சுமி மதசூதனன் கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி வைத்து பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். முகாமில் 15 க்கும் மேற்பட்ட துறைகள் ஏற்பாடு செய்யப்பட்டது இதில் சுமார் 1500 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பல்வேறு கோரிக்கைகளை மனுவாக அளித்தனர். நிகழ்ச்சியில் வார்டு கவுன்சிலர்கள் விஜயரங்கன், மலர் தனசேகரன், பார்த்திபன், ராஜேந்திரன், தேவி நேரு, சாந்தி கார்த்திக், மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.



■ மதுரை திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட சிலைமான்,புளியங்குளம் ஆகிய ஊராட்சிகளுக்கு நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்”முகாமில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செந்தில்மணி,துணை வட்டார வளர்ச்சி அலுவலர் லீலாவதி, ஊராட்சி செயலாளர்கள் சுரேஷ், ராணி ஆகியோர் முன்னிலையில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு மனு அளித்தனர்.

## கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) சார்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் தற்போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு ஃபோர்க்லிஃப்ட் ஆப்பரேட்டர் (Forklift Operator) பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சியானது ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யும் நிறுவனங்களில் ஃபோர்க்லிஃப்ட் ஆப்பரேட்டர்களின் முக்கிய பங்கு வகிக்கின்றது. இப்பயிற்சியில் சேர ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தை சார்ந்தவர்களாகவும், குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும். 18 முதல் 35 வயது வரை உள்ளவர்களாகவும், குறைந்தபட்சம் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சியினை முழுமையாக முடிக்கும் இளைஞர்களுக்கு பயிற்சி சான்றிதழ் மற்றும் வேலைவாய்ப்பிற்கு வழிவகை செய்யப்படும்.

இப்பயிற்சியினை பெற தாட்கோ இணையதளமான (www.tahdco.com <http://www.tahdco.com/>) என்ற முகவரியில் விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சிக்கான கால அளவு ஒரு மாதம் ஆகும். மேலும் பயிற்சி பெறும் இளைஞர்களுக்கு தங்கும் விடுதி மற்றும் உணவு உட்பட செலவினம் தாட்கோ மூலமாக வழங்கப்படும் என கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா தெரிவித்துள்ளார்கள்.



## முன்னாள் படைவீரர்களுக்கான சட்ட உதவி மையக் கிளினிக் முதன்மை மாவட்ட நீதிபதி K. அறிவொளி திறந்து வைத்தார்

சிவகங்கை, ஆக.23-

தேசிய சட்டப் பணிகள் ஆணைக்குழு மற்றும் தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு செயல் திட்டத்தின்படி, மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களின் அறிவுரையின்படி, சிவகங்கை மாவட்டம் முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு சார்பில் “NALSA Veer Perivar Sahayata Yajana 2025 Legal Services Clinics at Zila Sainik Board” கிளினிக்கை மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி. K. அறிவொளி அவர்கள் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி பேசும் போது தெரிவித்ததாவது, பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் நாட்டைப் பாதுக்காக்கும் பணியில் ஈடுப்பட்டு ஒய்வு பெற்ற முன்னாள் படைவீரர்களுக்கான சட்ட உதவிகள் வழங்குவதற்கு சட்ட உதவி மைய கிளினிக் திறந்து வைக்கப்படுகின்றது. இம் மையத்திற்கு வழக்கறிஞர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் இராணுவத்தினர் தங்களுக்கு தேவையான சட்டம் சார்ந்த அல்லது சட்டம் சாராத உதவிகள் தேவைப்பட்டால் மையத்திற்கு வருகைத்தரும் வழக்கறிஞரிடம் அல்லது மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவிடம் தெரிவித்து பயன்பெறலாம். இணையவழி மூலம் https://nalsa.gov.in, மனு செய்யலாம். கட்டணமில்லா தொலைபேசி எண்: 15100 க்கு தெரிவித்து நிவாரணம் பெறலாம் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு செயலாளர்/சார்பு நீதிபதி திருமதி. V. ராதிகா, ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்ற நீதிபதி திருமதி. J.அனிதாகிருஷ்டி முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் (பொ) கேப்டன். திரு. சீ. விஜயகுமார், முன்னாள் படைவீரர் சங்கத் தலைவர் கேப்டன் திரு. தேவராஜ், வழக்கறிஞர் சங்கத் தலைவர் திரு.OL. ஜானகிராமன், வழக்கறிஞர் திரு.R.தனபால் மற்றும் முன்னாள் படைவீரர்கள், மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

# அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் கூட்டுறவுத்துறையின் சார்பில் ரூபாய் 3.23 கோடி மதிப்பீட்டில் சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் புதிய அலுவலக கட்டிடத்திற்கான கட்டுமானப் பணியினை தொடங்கி வைத்தார்





சிவகங்கை, ஆக.23-

கூட்டுறவு த்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் கூட்டுறவுத்துறையின் சார்பில் சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட பகுதியில், சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் புதிய அலுவலக கட்டிடத்திற்கான கட்டுமானப் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தலைமையில் தொடங்கி வைத்து தெரிவிக்கையில்,

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்திக் கொண்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த நான்காண்டுகளில், அனைத்து துறைகளும் சீரான வளர்ச்சி பெற்றிடும் வகையில், வியத்தகு சாதனைகளை மேற்கொண்டு வருகிறார்கள். குறிப்பாக, ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் அரசின் பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்தும், அதனை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார்கள். அதில், கூட்டுறவுத்துறையின் வாயிலாக பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, பொதுமக்களின் இல்லங்களுக்கே சென்று உரிய பயன்களை வழங்குவதற்கான நடவடிக்கையும், மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தியாவில் முதல் கூட்டுறவு சங்கம் 1904ல் திருவள்ளூர் மாவட்டத்தில் “திரூர்” என்ற கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டது. சேவை மனப்பான்மையுடன் செயல்பட்டு வரும் கூட்டுறவுத்துறை, தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டது பெருமைக்குரியதாகும். சிவகங்கை மாவட்டத்தில் மொத்தம் 211 வகையான கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் தவிர சிவகங்கை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள், மீனவர் கூட்டுறவு சங்கங்கள், தொழில் கூட்டுறவு சங்கங்கள், நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் என மொத்தம் 439 கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

மேலும், முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்கள் விவசாயிகள் பொருளாதார ரீதியாக வளர்ச்சி பெற வேண்டும் என்ற உயரிய நோக்குடன் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், விவசாயிகளுக்கான பயிர்க்கடன்களை தள்ளுபடி செய்தார்கள். அவ்வழியில், செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் கூட்டுறவுத்துறையின் வாயிலாக விவசாயிகளுக்கு தேவையான எண்ணற்ற திட்டங்களை வடிவமைத்து, அதனை சிறப்பாக செயல்படுத்தி, விவசா யிகளின் உற்ற தோழனாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திகழ்ந்து வருகிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு திட்டங்களால் தனி மனிதன் பயன் பெறுவதோடு மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த சமுதாய வளர்ச்சிக்கும் அவை அடிப்படையாக அமைகிறது. அதன்படி, பொருளாதார வளர்ச்சி மற்றும் கல்வி வளர்ச்சியில் தலைசிறந்த மாநிலமாக தமிழகம் திகழ்ந்து வருவது குறிப்பிடதக்கதாகும்.

மேலும், அடித்தட்டு மக்கள் பயன்பெறுகின்ற வகையிலும், கூட்டுறவுவே நாட்டுயர்வு என்ற அடிப்படையிலும் கூட்டுறவுத்துறையின் சார்பில் எண்ணற்ற திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு, ஒன்றிய அரசின் கூட்டுறவுத்துறையினை தன்வசம் வைத்துள்ள உள்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.அமித்ஷா அவர்களின் பாராட்டை பெற்றுள்ளதும் குறிப்பிடதக்கதாகும். கூட்டுறவு சங்கங்கள் நீண்ட நெடிய வரலாற்றை கொண்டவையாகும். அகில இந்தியளவில் பரந்து விரிந்து மக்களுக்கான சேவையை வழங்கி வருகிறது. ஐ.நா சபையால் அறிவிக்கப்பட்டு, 130 நாடுகளுக்கு மேலாக கலந்து கொண்ட மாபெரும் நிகழ்ச்சியில், தமிழக கூட்டுறவு த்துறையின் செயல்பாட்டிற்கு 5 விருதுகள் வழங்கப்பட்டதும் குறிப்பிடதக்கதாகும்.

தனிநபரின் பொருளாதார வளர்ச்சிக்கு பேருதவியாகவும், சமுதாயத்தில் அனைத்து தரப்பு மக்களுக்கும், நலிவடைந்த பிரிவினருக்கு கைகொடுத்து தூக்கிவிடும் துறையாகவும் கூட்டுறவுத்துறை சிறந்து விளங்கி வருகிறது. கூட்டுறவுத்துறையின் மூலம் பயிர்க்கடனுதவி, கால்நடை பராமரிப்பு கடனுதவி, நகைக்கடனுதவி, சுய உதவிக்குழு கடனுதவி, சிறு வணிக கடனுதவி, மகளிர் தொழில்முனைவோர் கடனுதவி, பணிபுரியும் மகளிர் கடனுதவி, ஆதரவற்ற பெண்களுக்கான கடனுதவி, மத்திய கால கடனுதவிகள், பண்ணை சாரா கடனுதவிகள், தானிய ஈட்டு கடனுதவிகள், டாப்செட்கோ கடனுதவிகள், டாம்கோ கடனுதவிகள், தாட்கோ கடனுதவிகள், வீட்டு வசதி கடனுதவிகள், வீட்டு அடமான கடனுதவிகள், வாகன கடனுதவிகள், நாட்டுப்புற கலைஞர்களுக்கான கடனுதவிகள், மாற்றுத்திறனாளி கடனுதவிகள், சம்பள கடனுதவிகள், நுகர்வோர் கடனுதவிகள், காலி வீட்டுமனை வாங்க கடனுதவிகள் மற்றும்

இதர கடனுதவிகள் என மொத்தம் 34 வகையான கடனுதவிகள் கூட்டுறவுத்துறையின் மூலம் வழங்கப்பட்டு அனைத்து தரப்பு மக்களின் நலன் காக்கப்பட்டு வருகிறது.

இதேபோன்று, கூட்டுறவு வங்கிகளும் தனித்துவம் வாய்ந்த, மக்களுக்கான வங்கியாக திகழ்ந்து வருகிறது. தமிழகத்தில் 38 வருவாய் மாவட்டங்களில் 23 மத்திய கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வந்தன. இந்தியா முழுவதும் மொத்தம் 350 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் உள்ளன. தற்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சேலத்திலிருந்து நாமக்கலுக்கு தனி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஒன்றை அறிவித்து, தொடங்கி வைத்துள்ளார்கள். அதனுடன் சேர்த்து இந்திய அளவில் 351 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளும், தமிழகம் அளவில் 24 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளும் சிறப்பாக நூறு சதவீதம் இலாபத்தில் செயல்பட்டு வருகிறது. மீதமுள்ள வருவாய் மாவட்ட அளவில் ஏற்படுத்த வேண்டிய 14 வங்கிகள் அதற்கேற்றார்போல் வரவு செலவு அறிக்கையின்படி, தொடங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியானது 2.9.1993 ஆம் ஆண்டு 15 கிளைகளுடன் தொடங்கப்பட்டு, தற்போது 32 கிளைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில், 15 கிளைகள் சொந்த கட்டிடத்திலும், மீதமுள்ள 17 கிளைகள் வாடகை கட்டிடங்களிலும் இயங்கி வருகிறது. விரைவில் அக்கிளைகள் சொந்த கட்டிடத்தில் இயங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொளப்படும். இவ்வங்கி இயங்குவதற்கு இந்திய ரிசர்வ் வங்கியின் அனுமதி கடந்த 2011ல் கிடைக்கப்பெற்றது குறிப்பிடதக்கதாகும்.

மேலும், சிவகங்கை நகரத்தின் மைய மற்றும் பிரதான பகுதியில் இயங்கி வந்த சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் பழமையான அலுவலக கட்டிடத்தினை புதுப்பித்திடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு, கூட்டுறவுத்துறையின் அமைச்சர் என்ற முறையில் இதுகுறித்து, எடுத்துரைத்து கடந்த சனவரி மாதம் சிவகங்கை மாவட்டத்திற்கு வருகைப்புரிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி வாயிலாக ரூபாய் 3.23 கோடி மதிப்பீட்டில், புதிய கட்டிடம் அமைவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அதன் பின்னர், 6,468 சதுர அடி பரப்பளவில் மூன்று தளங்களுடன் நவீன வசதிகளுடன் கூடிய புதிய கட்டிடம் கட்டுவதற்கு உரிய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, அப்பழைய கட்டிடம் முற்றிலுமாக அகற்றப்பட்டு, இன்றையதினம் சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கான புதிய அலுவலக கட்டிட கட்டுமானப் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது பெருமைக்குரிய ஒன்றாகும்.

கூட்டுறவே நாட்டுயர்வு, என்ற அடிப்படையில், கூட்டுறவுத்துறை விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்யும் உற்ற துறையாக திகழ்ந்து வருகிறது. மக்களுக்கான வங்கியும், கூட்டுறவு வங்கியே ஆகும். கூட்டுறவுத்துறையினை பொதுமக்கள், விவசாயிகள் சிறந்த முறையில் பயன்படுத்தி கொண்டு, தங்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவது மட்டுமன்றி, கூட்டுறவு சங்கங்களை வலுப்படுத்துவதற்கும் பொதுமக்கள் உறுதுணையாக இருந்திட வேண்டும் என மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மேலாண்மை இயக்குநர் (மத்திய கூட்டுறவு வங்கி) திருமதி உமா மகேஸ்வரி, சிவகங்கை நகர்மன்றத்தலைவர் திரு.சி.எம்.துரை ஆனந்த், நகர்மன்ற துணைத்தலைவர் திரு.கார்கண்ணன், பொது மேலாளர் (மத்திய கூட்டுறவு வங்கி) திரு.செந்தில்குமார், துணைப்பதிவாளர்கள் (கூட்டுறவுத்துறை) திரு.பாபு, திரு.செந்தில்குமார், திரு.பாலு, திரு.ஜெயசங்கர், திருமதி பாரதி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் மற்றும் ஒப்பந்ததாரர் திரு.சதீஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.




## இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

இராமநாதபுரம், ஆக.23-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கடந்த மாதம் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் அளித்த கோரிக்கை மனுக்களுக்கு எடுக்கப்பட்ட நடவடிக் கைகள் தொடர்பாக விளக்கம் வேளாண்மை த்துறையின் மூலம் தெரிவிக்கப் பட்டுள்ளன.

தொடர்ந்து இராமநாதபுரம், கடலாடி, கமுதி, முதுகுளத்தூர், பரமக்குடி ஆர்.எஸ். மங்கலம் திருவாடானை, போகலூர், நயினார் கோவில், மண்டபம் மற்றும் திருப்புல்லாணி வட்டாரங்களை சேர்ந்த விவசாயிகள் தங்கள் பகுதிகளில் உள்ள கோரிக்கைகளை வட்டார வாரியாக எடுத்துரைத்தனர். இந்த கோரிக்கைகளுக்கு தொடர்புடைய அலுவலர்கள் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகள் தொடர்பாக விளக்கம் அளித்தனர்.

அதனைத்தொடர்ந்து விவசாயிகள் முன்வைத்த கோரிக்கையான நீர் நிலைகள் தூர்வார நடவடிக்கை வேண்டுதல், மழை மானிகள் போதிய அளவு அமைந்திட வேண்டுதல், மான் மற்றும் காட்டுப் பன்றிகள் மூலம் ஏற்படுத்தும் பயிர் சேதங்களை தடுத்தல் மற்றும் கண்மாய்களில் சவடு மண் அள்ளுவதற்கு அனுமதிக்கப்பட்ட இடங்களில் கூடுதலாக மண் எடுப்பதாக புகார் செய்வதையொட்டி, அலுவலர்கள் ஆய்வு செய்ய வேண்டுதல் மற்றும் விவசாயிகளுக்கு போதியளவு பண்ணை குட்டைகள் அமைத்தல், சாலைகள் சீரமைத்தல், பழுதடைந்த மின் கம்பங்கள் மாற்றி தருதல், தாழ்வான மின்வயர்கள் செல்வதை சீர் செய்தல் போன்ற கோரிக்கைகள் மீது தொடர்புடைய துறை அலுவலர்கள் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக விளைநிலங்களில் மின் கம்பங்கள் சரி செய்தல் அதேபோல் உயர் அழுத்த மின் வயர்கள் தாழ்வாக செல்லும் இடங்களில் விரைந்து சரி செய்து கொடுக்கும் அளவிற்கு பணிகளை மேற்கொள்ளவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும் வேளாண்மை உழவர் நலத்துறை மூலம் மாதந்தோறும் நடைபெறும் இக்கூட்டத்தில் விவசாயிகளின் கோரிக்கைகள் கேட்டறியப்பட்டு அவர்களுக்கு உரிய தீர்வுகள் காணப்பட்டு வருகின்றது. மேலும் விவசாயிகள் வழங்கும் மனுக்கள் மீது தனி கவனம் செலுத்திடவும், அவர்களுக்கு உரிய பலன்கள் உரிய நேரத்தில் கிடைத்திடவும் அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும் எனவும் தெரிவித்தார். மேலும் விவசாயிகள் வேளாண் சார்ந்த சந்தேகங்களை அருகில் உள்ள வேளாண் அலுவலகங்களுக்கு நேரில் சென்று கேட்டறிந்து பயன் பெற்றிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.கோவிந்தராஜலு அவர்கள், வேளாண்மைத்துறை இணை இயக்குநர்; (பொ) திரு.பாஸ்கரமணியன் அவர்கள், கூட்டுறவு சங்க மண்டல இணைப்பதிவாளர் திருமதி.ஜீனு அவர்கள், மத்திய கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர்ஃ மேலாண்மை இயக்குநர் திருமதி.ராஜலெட்சுமி அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்; திருமதி. வாசுகி அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட விவசாய சங்க பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

## சிவகங்கை மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு




சிவகங்கை, ஆக.23-

சிவகங்கை மாவட்டத்திலிருந்து இந்திய தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சியினர், தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்த பின்னரும், கடந்த ஆறு ஆண்டுகளாக எவ்வித தேர்தலிலும் பங்கேற்காததன் காரணத்தை தெரிவிக்கும் பொருட்டு, அரசியல் கட்சியினருக்கு இந்தியத் தேர்தல் ஆணையத்தால் சம்பந்தப்பட்ட அரசியல் கட்சியினருக்கு காரணம் கேட்கும் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதில், சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த மனித நேய ஜனநாயக கட்சிக்கு சென்னையில் உள்ள முதன்மைத் தேர்தல் அலுவலகத்தில், வருகின்ற 26.8.2025ஆம் தேதிக்கு முன்னர் நேரில் ஆஜராகி காரணம் கேட்கும் அறிவிப்புக்கு விளக்கம் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.



■ மதுரை மாவட்டம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை சார்பில் தமுக்கம் மைதானம் மாநாட்டு மையத்தில் போதைக்கு எதிரான மாணவத் தூதுவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியை மேனாள் தலைமைச் செயலாளர் முனைவர்.வெ.இறையன்பு இ.ஆ.ப., (பணி நிறைவு) துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். காவல் கண்காணிப்பாளர்(அமலாக்கம் மதுரை சரகம்) திரு.எம்.சந்திரசேகரன் த.கா.ப., அவர்கள், மாநகர் காவல் துணை ஆணையர்(வடக்கு) திருமதி.ஜி.எஸ்.அனிதா த.கா.ப. அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக புதிதாக கட்டப்பட்டுள்ள பாலம் மற்றும் கட்டிடங்களை திறந்து வைத்ததைத்தொடர்ந்து,

## கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா குத்துவிளக்கேற்றி தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்தார்

கன்னியாகுமரி, ஆக.23-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமை செயலகத்திலிருந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட 6 ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சி பகுதிகளில் ரூ.8.03 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள பாலம் மற்றும் கட்டிடங் களை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்ததைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீன குத்துவிளக்கேற்றி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து பேசுகையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டிற்குட்பட்ட அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி பகுதிகளில் பல்வேறு திட்டங்களின் வாயிலாக கடைகோடி மக்களுக்கு சென்றடைய வேண்டும் என பல்வேறு வளர்ச்சித்திட்டபணிகளை அறிவித்தும் அதற்கான நிதி ஒதுக்கீடு மேற்கொண்டு சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் குழந்தைநேய பள்ளி உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.34 இலட்சம் மதிப்பில் அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம் லீபுரம் ஊராட்சிக்குட்பட்ட ஆமணக்கன்விளை அரசு தொடக்கபள்ளியில் கூடுதலாக 2 வகுப்பறை கட்டிடங்களும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.14 இலட்சம் மதிப்பில் குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியம் கட்டிமாங்கோடு ஊராட்சிக்குட்பட்ட மூலச்சன்விளை நியாயவிலைக்கடைக்கு உணவு தானிய வைப்பறை கட்டிடமும், ரூ.10 இலட்சம் மதிப்பில் கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், கொல்லஞ்சி ஊராட்சி க்குடப்பட்ட குட்டவிளையில் புதிய உணவு தானிய கிடங்கு கட்டிடமும் 15வது நிதிக்குழு மானியத்திட்டத்தின் கீழ் (சுகாதாரம்) ரூ.40 இலட்சம் மதிப்பில் தக்கலை ஊராட்சி ஒன்றியம், திக்கணங்கோடு ஊராட்சிக்குட்பட்ட தாறாவிளை பகுதியில் ஓலவிளை துணை சுகாதார நிலைய கட்டிடமும், ரூ.1.27 கோடி மதிப்பில் முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம் தூத்தூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் ஆரம்ப சுகாதார மைய கட்டிடமும் ரூ.1.25 கோடி மதிப்பில் மங்காடு ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடமும், நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.4.53 கோடி மதிப்பில் திருவட்டார் ஊராட்சி ஒன்றியம் அயக்கோடு ஊராட்சிக்குட்பட்ட செங்கோடி சாலை மலவிளையில் உள்ள தேவாலயத்திற்கு அருகே பரளியாறு நதியின் கீழ் கட்டப்பட்டுள்ள பாலம் என மொத்தம் ரூ.8.03 கோடி மதிப்பில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள பாலம் மற்றும் கட்டிடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்துள்ளார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பிலும், பொதுமக்களின் சார்பிலும் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் பேசினார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. மைக்கேல் ஆன்றணி பெர்னான்டோ, செயற்பொறியாளர் திருமதி.இயலிசை, திருவட்டார் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ராஜேஷ் குமார், ஒப்பந்ததாரர் திரு.கேட்சன், உதவி பொறியாளர்கள், முன்னாள் ஊராட்சி தலைவர், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# லஞ்சத்தை வாரிக்குவிக்கும் வேலூர் நில அளவையர் பழமலை

வேலூர், ஆக.23-

வேலூர் மாவட்டம் லட்சக்கணக்கில் லஞ்சம் பெற்று ஒருவர் சொத்தை இன்னொருவருக்கு மாற்றி தருவது, போலி பட்டாக்கள் தயாரித்து பென்சிங் அமைத்து தருவதில் கில்லாடி, சேர்க்காடு மற்றும் காரணம்பட்டில் இதுகுறித்து சமீபத்தில் தர்ம அடி உதை வாங்கிய பழமலை, இந்த புகார் பறந்தது தொகுதி அமைச்சருக்கு, டிரான்ஸ்பர் செய்ய உத்தரவிட்ட பிறகும், நான் திருந்த மாட்டேன் என தொடர்ந்து லஞ்சத்திலே ஊஞ்சலாடும் வேலூர் நில அளவையர் பழமலை..

பாதிக்கப்பட்ட மக்கள் மாவட்ட நிர்வாகத்திடம் அடுக்கடுக்காக புகார்கள் கொடுத்த அவலம்!!

தமிழக அரசும், மாவட்ட ஆட்சியரும், லஞ்ச ஒழிப்பு துறை, நில அளவையர் லஞ்சம் பெறும் ஊழியர் பழமலை மீது உடனுக்குடன் உரிய நடவடிக்கை எடுக்க கோரிக்கை...

வேலூர் மாவட்ட பிர்காவில் காட்பாடி, வேலூர் என இந்த தாலுகாக்களில் நில அளவையராக பணியாற்றி வருபவர் தான் இந்த பழமலை என்ற லஞ்சப் பேர்வழி.

ஏழை, எளிய மக்களிடம் எந்த ஒரு நில அளவைக்கும் ரூ. 10 ஆயிரம் முதல் ரூ.20 ஆயிரம் இடத்திற்கு ஏற்ப இடத்தின் வேளையில் சதவீதத்தில் ஸ்கெட்ச் போட்டு திட்டமிட்டு அதிகபட்ச தொகைகளை கறந்து விடுகிறார். அதேபோன்று ரியல் எஸ்டேட் அதிபர்களிடம் லட்சக்கணக்கில் லஞ்சம் பெறுவதும், அரசு ஊழியரின் விதிமுறைக்கு மாறாக செயல்பட்டு வருவதாகவும் பொதுமக்களிடையே அதிகப்படியான புகார்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு வந்த நிலையில் உள்ளது. அதாவது இடைவிடாது நில அளவையர் பழமலை என்பவரின் மீது புகார்கள் அதிகரித்த வண்ணம் உள்ளது குறிப்பிடத்தக்கது. இதுகுறித்து பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் செய்தியாளர்கள் இதுபோன்று லஞ்சம் பெறுவது சட்ட விதிமுறைக்கு மாறானது மற்றும் எதிரானதாகும் என பலமுறை எச்சரித்தும் என்னை எந்த கொம்பனாலும் எதுவும் செய்ய முடியாது என சில கைக்கூலிகளை வைத்துக் கொண்டு அவதூறு பரப்பி வருவதை வாடிக்கையாகவே கொண்டுள்ளார். இந்த ஜெகஜால கில்லாடி பழமலை. இதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறை தீர்வு நாள் கூட்டத்தில் நில அளவையர் பழமலை மீது லஞ்சப் புகார் குறித்து கோரிக்கை மனுவும் வழங்கியுள்ளனர் இவரால் பாதிக்கப்பட்டவர்கள். காட்பாடியில் பணியாற்றிய போதும் இது போன்று பொதுமக்களின் கழுத்தில் துண்டை போட்டு இறுக்கி வசூல் செய்தவர்தான் இந்த ஜெகஜால கில்லாடி பழமலை என்று சொன்னால் அனைவருக்கும் தெரிந்த ஒன்று. தற்போது வேலூர் சத்துவாச்சாரி பகுதியில் நில அளவையர் என்று சொல்லிக் கொண்டு எவ்வளவு வசூல் செய்ய முடியுமோ அவ்வளவு பணத்தையும் வாரி குவித்து வருகிறார் இந்த பழமலை. இதை தட்டிக் கேட்கும் செய்தியாளர்களை என்னிடம் மாதாமாதம் மாமூல் தர வேண்டும் என கேட்டார் அந்த செய்தியாளர் என்று அந்த குறிப்பிட்ட செய்தியாளர் மீது அவதூறு பரப்பி விடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார் இந்த அரிச்சந்திரன் வீட்டுக்கு பக்கத்து வீட்டுக்காரரான பழமலை. ஒரு செய்தியாளர் மீது இப்படி மிரட்டி பணம் கேட்டார் என்பதை தவிர வேறு எந்த புகாரையும் கூற முடியாது. இதுவும் மாத இதழின் பத்திரிகை ஆசிரியர் மற்றும் சட்டவிரோதமாக அநாகரிகமாக செயல்படும் சிலர்கள், இந்தப் பொய்யான தகவலை சமூக வலைதளங்களில்





பல்வேறு **whatsapp** குழுக்களில் பகிரும் சில நிறுவன செய்தியாளர்கள் ரிப்போர்ட்டர் என்று கூறிக்கொண்டு இதுபோன்று திட்டமிட்டு கைக்கூலிகளாக செயல்பட்டு ஒரு தொகையைப் பேசி பெற்றுக் கொண்டு பொய்யான செய்திகளை பரப்பி அவரிடம் பெருத்த தொகை யை கட்டிங் போடுவது இதுபோன்று பொய்யாக சித்தரித்து அவதூறு பரப்ப திட்டமிட்டு விட்டு தொலைபேசியில் என்னிடம் ஆதாரம் உள்ளது என இவர்கள் பேசிக் கொண்டதையே வைத்து ஒரு நாடகத்தை உருவாக்கி அவதூறு whatsapp குழுக்களிலும் சமூக வலைதளங்களிலும் பரப்பி வருகின்றனர். டிமாண்ட் பண்றாரா.. ஓ... அதெல்லாம் தப்பு தப்பு எனவும் பல்வேறு தகவல்களுடன் இவர்கள் நாடகம் நடித்து, இவர்களுடன் பழமலையும் இவர்கள் ஒரு ஆதாரம் அற்ற கைபேசி வாயிலாக வாய்ஸ் ரெக்கார்டு செய்து சமூக வலைதளங்களில் வாட்ஸ் அப்பில் பரவி வருகின்றனர். இந்த விஷயத்தில் நில அளவைகள் பழமலை என்று பொதுவெளியில் கூறினால் சொன்னால் ஐயோ அவனா அய்யய்யோ அவனா என் என்று கூறுமளவில் இவருடைய பணி இப்படி உள்ளது. குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் பழமலைக்கு அள்ளகைகளாக வேலூரைச் சேர்ந்த செய்தியை ஒழுங்காக எழுதத் தெரியாத ஒரு செய்தியாளர்கள் அதுவும் நான் ‘சீனியர் ரிப்போர்ட்டர்’’ என்று சொல்லிக் கொள்ளும் மேலே குறிப்பிட்டுள்ள நபர்கள், அதே போன்று ஒரு மாத இதழின் மாவட்ட செய்தியாளர்கள் என்று சொல்லிக் கொண்டு மூன்றெழுத்து அடைமொழியில் அழைக்கப்படும் ஒரு டுபாக்கூர் செய்தியாளர்கள் இவருக்கு பணத்திற்காக பக்கபலமாக செயல்படுகின்றனர்.

அவர்களுக்கு இந்த பழமலை மாதா மாதம் மாமூல் செலுத்துகிறார் என்பது வெட்கக்கேடான விஷயமாகும். பொதுமக்களிடம் முறைகேடாக வசூல் செய்வதை தட்டிக்கேட்பவர் செய்தியாளராகத்தான் இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. பொதுமக்களில் ஒருவருக்கும், தனி மனிதனுக்கும் அதிகாரம் உண்டு என்பதை அறியாத இந்த அறிவிலிதான் நில அளவையர் பழமலை. இவர் இது தொடர்பாகவும் தான் சிக்கிக் கொள்ளாமல் இருக்க குறிப்பாக சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று சொல்லலாம். அந்த சட்டத்தில் சிக்கி சின்னாபின்னமாவதை தவிர்த்துக் கொள்ள தான் ஒரு உத்தமன் என்பதை உலகுக்கு காட்ட ஒரு ஆடியோவை வெளியிட்டு இவர் தன்னை உத்தம புத்திரன் என்று உலகுக்கு காட்டியுள்ளார். ஆனால் அது உண்மையல்ல. இவர் ஒரு பசுத்தோல் போர்த்திய புலி. இவரது முகத்திரையை கிழித்து பொதுமக்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும், தமிழக அரசுக்கும் வெட்ட வெளிச்சத்திற்கு கொண்டு வருவதுதான் உண்மையான செய்தியாளர்களின் தலையாய கடமையாகும். அதை செய்வதற்கு தடையாக இருக்கிறார் இந்த பழமலையும், அவருக்கு துணையாக உள்ள அல்லக்கை மாத இதழ் நிருபர்களும் என்று சொன்னால் அதுதான் நேரடியாக சொன்னால் உண்மை திருடனுக்கு துணை போவது என்று சொல்வார்கள். அதுபோல வேலூரில் பொதுமக்களை கசக்கி பிழியும் அதிகாரிக்கு துணை போகும் டுபாக்கூர் நிருபர்களை கண்டறிந்து அவர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுத்தாலே போதும், நிலைமை சீராகிவிடும். செய்தியாளர்களை மிரட்டிப் பார்க்கும் நபர்களுக்கு யாரும் துணை போக மாட்டார்கள் என்பதை அறியாத இந்த அறிவிலிகள் பழமலை போன்ற நாகப்பாம்பிற்கு பால்வார்க்கின்றனர் என்று சொல்லலாம். இப்படி மாவட்ட நிர்வாகம் அமைதி காப்பதை விடுத்து உண்மையில் நடந்தது என்ன? நடப்பது என்ன? என்பதை பற்றி விரிவாக விசாரணை நடத்தினால் உண்மை வெட்ட வெளிச்சத்திற்கு வரும். அத்துடன் அந்த டுபாக்கூர் நிருபர் மற்றும் பழமலை பேசிய ஆடியோவில், நான் குடும்பத்துடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு செல்லப் போகிறேன் என்று தெரிவித்துள்ளார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் என்ன, மாநில காவல்துறை தலைவர் அலுவலகத்திற்கு சென்றாலும் உண்மை எங்கிருக்கிறதோ அங்குதான் நியாயம் கிடைக்கும், நீதி கிடைக்கும், நேர்மையாக பணிபுரிந்ததற்கு ஆதாரமும் கிடைக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இவர் ஏதோ தான் யாரிடமும் மிரட்டி பணம் வாங்கவில்லை. நான் அரசு பணியை மட்டுமே செய்து கொண்டு அரசு தரும் சம்பளத்தை மட்டுமே வாங்கிச் செல்வதாக கூற வருவது எவ்வகையில் உண்மை என்பது விசாரிக்கும் விதத்தில் விசாரித்தால் உண்மை ஒருநாள் வெளிவரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆக மொத்தத்தில் இது போன்ற வருவாய் துறையில் உள்ள லஞ்சப் பேர்வழிகளை கண்டறிந்து வருவாய்த்துறை ரீதியான நடவடிக்கையை விசாரணையை துரிதப்படுத்தினால் இவர் சட்டத்தின் முன் சிக்கி சின்னா பின்னமாவது உறுதி. ஆக மொத்தத்தில் பழமலை பஞ்சாமிர்தம் ஆகும் காலம் நெருங்கி வருகிறது கனிந்து வருகிறது என்றே சொல்லலாம். காலம் கனியட்டும், நீதி வெல்லட்டும், உண்மை ஒருபோதும் மறையாது மாறாது என்பதற்கு பழமலையின் பொய் பிரச்சாரம் எடுபடாமல் போகும் என்பதில் யாருக்கும் எவ்வித ஐயமும் இல்லை. விரைந்து இவர் மீது ஒரு விசாரணையை துறை ரீதியாக நடத்தினால் அதில் உள்ள உண்மை தன்மை வெளிவரும் என்பதை அடித்துக் கூறலாம். ஆக மொத்தத்தில் ஒரு செய்தியாளரை இன்னொரு செய்தியாளரை வைத்து மிரட்ட பார்ப்பது எவ்வகையில் எடுபடும் என்பது போகப் போக தெரியும். அந்த செய்தியாளர்கள் யார்? யார்?. அவர்கள் என்னென்ன வேலைகளை செய்து கொண்டுள்ளார்கள். எங்கெங்கு மாமூல் வசூல் செய்கிறார்கள். யார்?யார்? இவருக்கு பின்னணியாக செயல்படுகின்றனர். பின்புலமாக செயல்படுகின்றனர் என்பதை கண்டறிந்தால் அவர்களும் பதில் சொல்ல கடமைப் பட்டவர்கள் ஆவார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆக மொத்தத்தில் திருடனுக்கு துணை போவது தவறு என்பதை அறிந்து கொண்டு நின்று நிதானமாக செயல்பட்டால் அந்த செய்தியாளர்கள் சிந்திப்பார்கள். விரைவில் பழமலையை விசாரிக்கும் விசாரணை வளையத்தில் இந்த டுபாக்கூர் செய்தியாளர்களும் சிக்கி அவர்களது பங்குக்கு பதில் சொல்ல வேண்டி வரும் என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு செய்தியாளரை பிடிக்கவில்லை என்பதற்காக அவர் மீது இல்லாததையும், பொல்லாததையும் கூறி திட்டமிட்டு அவதூறு பரப்பி ஆதாரம் உள்ளது என பொய்யான தகவலை நாடகமாடி பேசி, அதை ஒரு தகவலாக மாற்றி இணையத்திலும், குறுஞ்செய்தி வடிவிலும் வெளியிடுவது ஆரோக்கியமானது அல்ல என்பதை அந்த டுபாக்கூர் நிருபர்கள் இனிவரும் காலங்களில் அறிந்து கொண்டு சீர்தூக்கி பார்த்து செய்திகளை வெளியிட வேண்டும் என்பதே ஒட்டுமொத்த செய்தியாளர்களின் எதிர்பார்ப்பாக மாறி உள்ளதும் குறிப்பிடத்தக்கது. லஞ்சத்தை வாரிக்குவிக்கும் வேலூர் நில அளவையர் பழமலை!! லட்சக்கணக்கில் லஞ்சம் பெற்று ஒருவர் சொத்தை இன்னொருவருக்கு மாற்றி தருவது, போலி பட்டாக்கள் தயாரித்து பென்சிங் அமைத்து தருவதில் கில்லாடி, சேர்க்காடு மற்றும் காரணம்பட்டில் இதுகுறித்து சமீபத்தில் தர்ம அடி உதை வாங்கிய பழமலை, இந்த புகார் பறந்தது தொகுதி அமைச்சருக்கு, கடுமையான நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளனர் இருந்தும் கருணை அடிப்படையில் டிரான்ஸ்பர் செய்ய உத்தரவிடப்பட்டும், வேலூருக்கு டிரான்ஸ்பர் செய்த பிறகும், நான் திருந்த மாட்டேன் என தொடர்ந்து லஞ்சத்திலே ஊஞ்சலாடும் வேலூர் நில அளவையர் பழமலை.. பாதிக்கப்பட்ட மக்கள் மாவட்ட நிர்வாகத்திடம் அடுக்கடுக்காக புகார்கள் கொடுத்த அவலம்!! தமிழக அரசும், மாவட்ட ஆட்சியரும், லஞ்ச ஒழிப்பு துறை, நில அளவையர் லஞ்சம் பெறும் ஊழியர் பழமலை மீது உடனுக்குடன் உரிய நடவடிக்கை எடுக்க கோரிக்கை... இதற்கு மேலும் என்ன நடக்கிறது என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ள டுபாக்கூர் நிருபர்களின் மாத இதழ் பத்திரிகை ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர் அவர்களின் செயலை கண்காணித்து நாம் ஆராதனை பெற்றது மக்கள் நலனுக்காக என்பதை உணர்த்தும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இதுபோன்று செயல்பட்டு அதிலிருந்து கொஞ்சம் வரும் பணத்தை சாப்பிடும் நிலைமையை மாற்றிக் கொண்டு பத்திரிகை துறை மத்திய மாநில அரசின் விதிமுறைப்படி, புலனாய்வு செய்து, நேர்மையாக, உண்மையாக, மறைக்கப்பட்ட உண்மைகளை வெளிக்கொண்டு வருவது, பொதுமக்கள் நலன் கருதி பொது செய்திகளை வெளியிட்டு பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நடத்துவதுதான் பத்திரிக்கை தர்மம், உண்மையான விஷயங்களுக்கு தலையிட்டு செய்தி வெளியிட அறிவுரை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## கே.வி.குப்பம் தாலுகா, சேத்துவண்டை, வேப்பூர் ஆகிய ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

வேலூர், ஆக.23-

வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் தாலூகா, சேத்துவண்டை, வேப்பூர் ஆகிய ஊராட்சியில், ரைஸ் பேலஸ் தனியார் மண்டபத்தில், உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம், சேத்துவண்டை ஊராட்சி மன்ற தலைவர் மகாலட்சுமி சரவணன், கவுன்சிலர் மீனா மார்கபந்து, வேப்பூர் ஊராட்சி மன்ற தலைவர் கோடீஸ்வரி பாபு கவுன்சிலர் சீதாராமன் மற்றும் வட்டாட்சியர் பலராமன் ஆகியோர் தலைமையிலும், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜன்பாபு, பெருமாள் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. இம்முகாமில் சிறப்பு பார்வை மற்றும் கண்காணிப்பாளராக மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன் கலந்துகொண்டு பார்வையிட்டு முகாமை வழி நடத்தினர். இதில் கே.வி.குப்பம் தாலுக்காவில் உள்ள தன்னார்வலர்கள் மூலம் பொதுமக்கள் குறைகளின் பெயரில் டோக்கன் விண்ணப்பங்கள்





வழங்கியதை பூர்த்தி செய்து உரிய ஆவணங்களை இணைத்து, உங்களுடன் ஸ்டாலின் திட்ட விண்ணப்பங்கள், தகவல் கையேடுகள், மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்ட 43 சேவைகளுக்கான கோரிக்கைகளுக்கு தீர்வு காணும் விதமாக முகாமிற்கு முன்னதாகவே அப்பகுதி மக்களுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. விண்ணப்பங்கள் பெற்ற பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வழங்கினர். தொடர்ந்து மனுக்களை பெற்ற அதிகாரிகள் தகுதியுடைய பயனாளிகளுக்கு உடனடியாக பதிவேற்றங்கள் செய்து நலத்திட்ட ங்களை வழங்கினர். இதில் அனைத்து துறைகள் சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள், மக்கள் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.






■ தென்காசி மாவட்டம் கடையநல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நாட்டு நலப்பணி திட்டத்தின் சார்பாக பட்ட மேற்படிப்பு முதலாமாண்டு மாணவ மாணவிகள் வழிகாட்டு நெறிமுறை கூட்டம் கல்லூரி முதல்வர் (மு.கூ.பொ) .ஜெயா தலைமையில் நடைபெற்றது ஆங்கிலத்துறை தலைவர் முனைவர் ராம் சங்கர் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக மாவட்ட வேலை வாய்ப்பு இளநிலை அலுவலர். மார்த்தாண்ட பூபதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். வேலைவாய்ப்பு அலுவலர் கமல்ராஜ் போட்டித் தேர்வுகள் மற்றும் அதன் சிறப்பம்சங்கள் குறித்து மாணவ மாணவிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார் இதில் அனைத்து துறைத்தலைவர்கள் பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் முனைவர்.பால்மகேஷ் வரவேற்று தொகுத்து வழங்கினார். இறுதியில் கணிதவியல் துறை தலைவர் மரகத கோமதி நன்றி கூறினார்.




## அணைக்கட்டு, பள்ளிகொண்டான், அருள்மிகு ரங்கநாதசுவாமி திருக்கோயில் ரூ.2.96 கோடி மதிப்பில் புனரமைப்பு திருப்பணி துவக்க விழா!!

### மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி கலந்து கொண்டு சிறப்பு பூமி பூஜை செய்து பணியை துவக்கினார்

வேலூர், ஆக.23-

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, பள்ளிகொண்டா பேரூராட்சி, பள்ளிகொண்டான் இந்து சமய அறநிலைத்துறை சார்பில், அருள்மிகு அரங்கநாயகி உடனுறை உக்கிர ரங்கநாத சுவாமி திருக்கோயிலில், ரூ. 2.96 கோடி மதிப்பில் புனரமைப்பு திருப்பணி துவக்க விழா, தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைத்ததை தொடர்ந்து, வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி தலைமையில், மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் மு.பாபு, இந்து சமய அறநிலைத்துறை இணை ஆணையர் அனிதா, உதவி ஆணையர் சங்கர், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் அசோகன், பள்ளிகொண்டா பேரூராட்சி மன்ற தலைவர் சுபபிரியா குமரன், வட்டாட்சியர் வேண்டா, துணைத் தலைவர் வில்சன், திருக்கோயில் செயல் அலுவலர் நடராஜன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இவ்விழாவில் குமாரபாண்டியன், வெங்கடேசன், சுகுமார், நீதி அரசன், ஜோதி, செல்சிவா, அரசு வழக்கறிஞர் கார்த்தி, வசீம் அக்ரம், பழனி, குமரவேல், நாராயணன், பாசிலா சபீர்கான், செல்வம், பிச்சாண்டி புகழேந்தி, ஆனந்தன், மாறன், கார்த்திக், பிச்சைமணி, கோயில் பணியாளர் பாபு மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், மக்கள் பிரதிநிதிகள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், உதவிய அலுவலர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் அறங்காவலர் குழு உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு பூமி பூஜை துவக்க விழாவை சிறப்பித்தனர்.



## மானாமதுரையில் நடத்துனருக்கு அறிவாள் வெட்டு காவல்துறையினர் விசாரணை

சிவகங்கை, ஆக.23-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே சிறுகுடி கிராமத்தை சேர்ந்த முத்துப் பாண்டி மகன் தவச்செல்வம்(23). இவர், மதுரை இளையான்குடி இடையே இயங்கும் தனியார் பேருந்தில் நடத்துநராக பணிபுரிந்து வருகிறார். இவர் வழக்கம் போல நேற்று மாலை பணி முடிந்து மானாமதுரை புதிய பேருந்து நிலையத்தில் இறங்கி உள்ளார். அப்போது அடையாளம் தெரியாத சிலர், அவரை சரமாரியாக தலை, முகம், கழுத்தில் வெட்டிவிட்டு தப்பி ஓடினர். படுகாயம் அடைந்த தவச் செல்வம் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். புகாரின் பேரில் மானாமதுரை காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161